குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.44/2020

அ.சா.4

2025-ம் ஆண்டு நவம்பர் 10-ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 04-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | தொழில் | |
| தந்தை பெயர் | பழனிசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.340 மணி,

Accused Venkatesan present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.P.Dasaradhan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஆர்.சி.செட்டிப்பட்டியில் வசித்து, ஆர்.சி.செட்டிப்பட்டி ரவுண்டானா அருகே கலாம் பாராமெடிக்கல் சயின்ஸ் என்ற பெயரில் கல்லூரி நடத்தி வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு, அ.சா.2 எனது அண்ணன் பாரதி என்பவரின் துணிக்கடை ஆர்.சி.செட்டிப்பட்டி ரவுண்டானா அருகே உள்ளது. அந்த இடத்தில் விபத்து நடந்தது என்று சொன்னார்கள்.

2. விபத்து நடந்த மறுநாள் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். விபத்து நடந்தது குறித்து, என்னிடம் விசாரித்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும், எனது உறவினர் மகன் கிருஷ்ணன் என்பவரும் கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் கையெழுத்திட்ட பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று என்னால் முழுவதுமாக சொல்ல முடியுமா என்றால் தெரியாது விபத்து பற்றி

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:59:45 +0530

எழுதியிருந்தார்கள். பார்வை மகஜர் தயாரித்தபோது, எத்தனை போலிசார் சீருடையில் வந்தார்கள் என்றும், எத்தனை போலிசார் சாதாரண உடையில் வந்தார்கள் என்றும் என்னால் தற்போது சொல்லமுடியுமா என்றால், முடியாது ஆனால் இரண்டு போலிசார்கள் வந்தார்கள்.

4. நான் எழுதப்படாத வெள்ளை தாளில் கையெழுத்து செய்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிய்லல.

**மறுவிசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.45 மணி.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:59:48 +0530